ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஶ்ருதிஸ்ம்ருதிப்ரதிபாதித ஸகல ஸத்கர்மாநு
ஷ்டாந ஹேதுபூதம் மஹாயாகாதி
சத்வாரிம்ஶத்ஸம்ஸ்கார ராஜயோகாதிபஹு
விஷயஸமேதம்
த்ரைகாலிக ஶுபாஶுப பரிஜ்ஞாநவிஜ்ஞ
[illegible] ப்ரணீதம்
பௌதாயந ஶாஸ்த்ரம்.

த்ராவிடபாஷ்யஸஹிதம்

ஶாஸ்த்ர[illegible] || விஶ்வநாதஶாஸ்த்ரிணா

ஸம்ஶோத்ய பரீக்ஷிதம்

தி || ஸ்வாமிநாதஶாஸ்த்ரிணாம் ஸ்வகீய
ஶாஸ்த்ரஸஞ்ஜீவிநீ முத்ராக்ஷரஶாலாயாம் முத்ரிதம்
ஸஜ்ஜநஸம்ரக்ஷண காமஸாதகம்
ஜேஜீயதே தராம்.

வேலூர்.

1902.

புததர்மசாஸ்திரம்.

[illegible] ॥க॥

என்றது) வேதாத்தியயனஞ் செய்தபிறகு, தர்மசாஸ்திரங்களையும் அத்தியயனஞ்செய்து அவைகளில்சொல்லியபடி அநுஷ்டானஞ்செய்ய வேண்டியது முக்கியமாதலால் அதற்காக முநியாகிய புதனென்கிற நான் ஒரு தர்மசாஸ்திரத்தைச் சொல்லுகிறேன்.

[illegible] ॥உ॥

(எ-து) தர்மமானது இந்தஜன்மம் ஒழிந்தபிறகு மோக்ஷத்தையும் இந்தஜன்மத்தில் பலவிதமான சுகத்தையும் அடைகிறதற்கு முக்கிய சாதனமாகும்.

[illegible] ॥ங॥

(எ-து) பிராமணன் கர்ப்பமுண்டானவருஷம்முதல் எட்டாவதுவருஷத்தில் வசந்தருதுவிலும், க்ஷத்திரியன் கர்ப்பந்தரித்தபதினொன்றாவது வயதில்கிரீஷ்மருதுவிலும், வைசியன் கர்ப்பந்தரித்த பன்னிரண்டாவதுவயதில் வருஷருதுவிலும் தனக்கு உபநயநஞ்செய்துகொள்ள வேண்டும்.

[illegible] ॥ச॥

(எ-து) முஞ்சி, கிருஷ்ணாஜிநம், தண்டம், தீர்த்தகடம், யக்ஞோபவீதம், இவைகளை உபநயநமான தினமுதற்கொண்டு தரித்துக்கொண்டிருக்கவேண்டும்.

[illegible]

(எ-து) குருசுச்ருஷைசெய்து கொண்டு அவரிடத்தில் வேதாத்தியயனத்தைச் செய்பவனாய் வித்தியா லாபத்தை யடைந்துகொண்டே அந்த குருவினுடைய அபிப்பிராயத்துக்கிணங்கி நடக்கவேண்டும்.

ஸூ॥ ஸாவித்ரீ வேதவ்ரத ப்ரதீக வ்ரதோபநிஷத்கோதாந த்ரி
ஸுபர்ண வ்ரதாநி ஸமாபயேத்॥ ௬॥

(எ-து) ஸாவித்திரீவிரதம், வேதவிரதம், பிரதீகவிரதம், உபநிஷத்விரதம், கோதானவிரதம், திரிஸுபர்ண விரதம், ஆகிய இவைகளை அநுஷ்டிக்கவேண்டும்.

ஸூ॥ ஸமாவர்தநாஜ்ஞயா ஸ்நாயாத்॥ ௭॥

(எ-து) இவைகள் முடிந்தபிறகு குருவினிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு பிரும்மசரியவிருதத்தை விடுவதற்குரிய ஸ்நாதகமென்னும் விரதத்தைச்செய்யவேண்டும்.

ஸூ॥ ஸவர்ணாம் [illegible]
[illegible] ஜாம்॥ ௮॥

(எ-து) மாதுருவம்சத்தில் ஐந்து தலைமுறையும் பிதுருவம்சத்தில் பத்துத்தலைமுறையும்விட்டு அதற்குமேற்பட்ட அந்நிய கோத்திரத்தில் பிறந்த ஸஜாதியளான கன்னிகையை விவாகஞ் செய்து கொள்ள வேண்டும்.

ஸூ॥ ருதாவுபேயாத்॥

(எ-து) அந்த பாரியை இருதுவான பிறகு அவளிடத்தில் சேர வேண்டும்.

ஸூ॥ [illegible]॥ ௯॥

(எ-து) மாதந்தோறும் அவள் ருதுஸ்நானஞ்செய்த நாலாவது நாள் முதல் இரட்டைநாட்களில் அவளுடன் சங்கமஞ்செய்தால் புத்திரன் ஜனிப்பானாதலால் அந்தப்படியே செய்யவேண்டும்.

ஸூ॥ [illegible]
[illegible]॥ ௧௦॥
[illegible]

(எ - து) அவள் கர்ப்பம்தரித்ததற்கு, கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தோந்நயநம், சோஷியந்தீ என்னும் கர்மங்கள், ஜாதகர்மம், நாமகரணம், உபனிஷக்ராமணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம் என்னும் நான்கு வேதவிரதங்கள் ஆகிய இவைகளைச் செய்யவேண்டும்.

ஸ॥ யாவதக்ந்யாதானம் தஸ்மிந் ஸ்மார்த்தே வை

த்ரேதே தேவபித்ருமநுஷ்ய பூதயக்ஞாநாசரேத்॥ ௰௨॥

(எ - து) அக்நியாதானஞ்செய்து அக்நிஹோத்ரம் ஆரம்பிக்கிறவரையில், விவாகஞ்செய்துகொள்கையில் உண்டாக்கிக்கொண்ட அக்நியில் தேவயக்கியம், பிதுருயக்கியம், பூதயக்கியம், மநுஷியயக்கியம், என்னும் கர்மங்களைச் செய்யவேண்டும். (தேவயக்கியம், ஔபாஸனம் முதலியவை. பிதுருயக்கியம், மாஸசிராத்தம் முதலியவை. பூதயக்கியம், வைசுவதேவத்தில் செய்யும் பூதபலி. மனுஷியயக்கியம், அதிதிகளுக்குபோஜனம்செய்விப்பது).

ஸ॥ அதிதீந்பந்தூந் ஸ்வஸ்ய ப்ருத்யாந் பொஷ்ய

வர்க்கம்ஸ்ச॥ ௰௩॥

(எ - து) அதிதிகளுக்கும், வேலைக்காரர்களுக்கும், பந்துக்களுக்கும், தான் காப்பாற்றவேண்டிய புத்திர மித்திரர்களுக்கும் போசனஞ்செய்விக்கவேண்டும்.

ஸ॥ ஸ்வ வாயஸாதிப்யோ ஸமேதப்யோ ஹ்யந்நாநு

போஜயேத்॥ ௰௪॥

(எ - து) யமதர்மராஜாவினிடத்தில் பிறந்த நாய்களுக்கும் வாயஸம் முதலியவைகளுக்கும் பூமியில் அந்நபலிவைத்தபிறகு அதிதி பூஜை செய்யவேண்டும்.

ஸ॥ அஷ்டகா பார்வணஸ்ராத்தம்ஸ்ராவண்யாக்ரஹாயணீசைத்ர்யாஸ்வயுஜீசேதி பாகயஜ்ஞாநாசரேத்॥

(எ - து) அஷ்டகாசிராத்தம் பருவத்தில் செய்யவேண்டிய ஸ்தாலீபாகம், மாஸ சிராத்தம், ஸர்ப்ப பலி, ஆக்ரயண ஸ்தாலீபாகம், ஈசாந பலி, மகாளயசிரார்த்தம் இந்தப் பாகயக்கியங்களைச்செய்யவேண்டும்.

[illegible] ||௰௬||

(எ-து) அக்நியாதானஞ்செய்து அந்த அக்நியில் காலை மாலைகளில் அக்நி ஹோத்திரம், பிரதமைகளில் தர்ச பூர்ணமாஸஇஷ்டிகள், சாதுர்மாஸியம், பசுபந்தம், அனுபந்திய கிரது, ஸௌத்திராமணி என்னும் ஹவிர்யக்கியங்களைச்செய்யவேண்டும்.

[illegible] ||௰௭||

(எ-து) ஸோமயாகம், அத்யக்நிஷ்டோமம், உக்தியம், ஷோடசி, வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என்னும் ஸோமயாகங்களைச்செய்யவேண்டும்.

[illegible] ||௧௮||

(எ-து) ஸர்வப்பிராணிகளிடத்திலும் தயை, பொறுமை, பொறாமை இன்மை, பரிசுத்தம், மனத்துக்கு ஆயாச மில்லாமை, அழல், திட்டல் முதலிய கெட்டசெய்கைகளில்லாமை ஆகிய இந்த குணங்களுள்ளவனாயும் தானனுபவிக்காமலும் பரோபகாரம் செய்யாமலும் கிருபணனாக இருத்தல், அந்நியருடைய பொருளைத் தானடையவேண்டுமென்கிற பேராசை அடைதல் ஆகிய இந்த இரண்டு குணங்களையும் விடுதல் ஆகிய ஞானசாதனமான இந்த எட்டு ஆத்மகுணங்களுமிருக்கவேண்டும்.

[illegible] ||௰௯||

(எ-து) நியாயமாய்த் தான்சம்பாதித்த பொருளைக் கொண்டு தர்ம காரியங்களையும் குடும்ப சம்ரக்ஷணையையும் செய்யவேண்டும்.

[illegible] ||௨௰||

(எ-து) வேதாத்தியயநம் செய்வித்தல், யாகம் செய்வித்தல், தானம் வாங்குதல், பொன் வெள்ளி முதலியவைகளில் வியாபாரஞ்செய்தல், ஆஸ்தியைப்பாகித்துக்கொள்ளுதல், புதையல் அடைதல், அறுப்பு அறுத்த வயலிலும் களத்துமேட்டிலும் சிந்திக்கிடக்கும் தானியத்தை எடுத்துக் கொள்ளுதல், தான் கேளாமல் பிறர் கொடுக்கும் பொருளை வாங்கிக்கொள்ளுதல், பயிர்செய்தல், வியாபாரஞ்செய்தல் இவைகளை ஜீவநோபாயமாகச் செய்துகொள்ளவேண்டும்.

ஸூ|| ஆபத்காலே துஷ்டாபஸதேப்யோ ப்ரதிக்ரஹ: || உக ||

(எ-து) ஆபத்துக்காலத்தில் துஷ்டர்கள், அற்பஜாதியார் இவர்களிடத்திலும் பிரதிக்கிரகம் செய்துகொள்ளலாம்.

ஸூ|| தத்ஸம்பவே க்ஷத்ரியவ்ருத்த்யா || உஉ ||

(எ-து) மேலேசொன்ன ஜீவநோபாயங்கள் கிடைக்காத பட்சத்தில் இராஜவிர்த்தியினாலும் ஜீவனஞ்செய்யலாம்.

ஸூ|| நவ்ருத்திஸங்கரம் குர்யாத் || உங ||

(எ-து) பலவிதமான தொழில்களையோ செய்யவே கூடாது.

ஸூ|| வ்ருத்திஸங்கராத் ஜாதிஸங்கர: ப்ரஸஜ்யதே || உச ||

(எ-து) பலவிதத்தொழில்களால் தனது ஜாதியைக் கெடுத்துவிடாமல் குலதர்மத்தைக் காப்பாற்றவேண்டும்.

ஸூ|| க்ஷத்ரியஸ்ய விஜிதா || உரு ||

(எ-து) க்ஷத்திரியர் இதர இராஜர்களை ஜெயித்து இராஜ்ஜியத்தைச் சம்பாதித்து ஜீவிக்கவேண்டும்.

ஸூ|| க்ருஷி: பாசுபால்யம் வாணிஜ்யம் வைச்யஸ்ய || உசு ||

(எ-து) வைசியன் பயிரிடுதல், பசுமாடுகளின் பால் தயிர் விற்றல், வர்த்தகஞ்செய்தல் இவைகளால் ஜீவிக்கவேண்டும்.

ஸூ|| சூத்ரஸ்ய வ்ருத்தி: ப்ராஹ்மணக்ஷத்ரியவைச்யாநாம் சுச்ரூஷா || உஎ ||

(எ-து) சூத்திரன், பிராமண க்ஷத்திரிய வைசியர்களுக்கு ஊழியம் செய்து ஜீவிக்கவேண்டும்.

ஸூ|| ஶூத்ரஸ்ய மாநுஷ்யக்ஷ: ப்ரணாமஶுஶ்ரூஷயா:||

(எ-து) சூத்திரன்மற்ற மூன்றுஜாதியர்களையுந் துன்பப்படுத்தாமல் அவர்களிடத்தில் பக்திவைத்து நித்தியம் ஸேவிக்கவேண்டும்.

ஸூ|| க்ருதக்ருத்யஸ்ய வாநப்ரஸ்த்யம்||

(எ-து) முன்சொன்ன பிரம்மசர்யாசிரமத்தாரும், கிரகஸ்தாசிரமத்தாரும், தங்களுக்கு விதித்த கர்மங்களை நிறைவேற்றின பிறகு பத்நியைக்கூட அழைத்துக்கொண்டு வனம்போய்வானப்பிரஸ்தாசிரமத்தை அனுஷ்டிக்கவேண்டும்.

ஸூ|| விரக்தஸ்ய ப்ரவ்ரஜ்யா||௫௰||

(எ-து) ஸம்ஸாரத்தின் ஆசாபாசம் தேகாபிமானம் ஆகிய இவைகளை முற்றும் விட்டவன் ஸந்நியாஸம் செய்துகொள்ளத்தக்கவன்.

ஸூ|| ஸ்வஸ்வாஶ்ரமாநுஷ்டானம் வர்ணாநாமாஶ்ரமாணாஞ்ச||௫௧||

(எ-து) பிராமணாதிஜாதியாருக்கும் பிரம்மசர்யம் முதலான ஆச்சிரமத்தார்களுக்கும் அவரவர்களுக்கு விதித்தபடி நடப்பது நன்மையாம்.

ஸூ|| விஹிதாகரணே ப்ரதிஷித்தஸேவநே ச நரகப்ராப்தி:||

(எ-து) அவரவர்களுக்கு விதித்த காரியத்தைச் செய்யாமல் விதிக்கப்படாத காரியத்தைச் செய்தால் நரகம் கிடைக்கும்.

ஸூ|| விஹிதகர்மத்யாகினாம் ராஜா காரயிதவ்ய:||௫௨||

(எ-து) அவரவர்களுக்கு விதித்த யுக்தமான காரியத்தைசெய்யாதவர்களுக்கு இராஜன் தக்க ஏற்பாடுசெய்து அவனவனுடைய குலதர்மத்தைச்செய்யும்படி சீர்திருத்தவேண்டும்.

ஸூ|| கண்டகாந்ஶோதயேச்ச|| ௫௪||

(எ-து) வழிமுதலிய விடங்களில் உள்ள முள் முதலிய வற்றையும் பிறருக்குத் துன்பமுண்டாக்குகிறவர்களையும் கண்டுபிடித்து நீக்கிச் சீர்திருத்தவேண்டும்.

𑌸𑍂॥ 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌾𑌨𑍇𑌕𑌕𑌾𑌰𑍍𑌯𑌿𑌣𑌾𑌂 𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑍇𑌤𑍍॥ ௬௫॥

(எ-து) ஒரேபொருளை விரும்பும் பலபேர்களுடைய வியவஹாரத்தைவிசாரித்து நியாயமான ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

𑌸𑍂॥ 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌯𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌃 𑌶𑌾𑌸𑌯𑍇𑌤𑍍॥

(எ-து) மேலேசொன்ன அக்கிரமம் செய்கிறவர்களை கட்டாயப்படுத்தித் தர்மத்தில் விலகாமல் நிற்கும்படி செய்யவேண்டும்.

𑌸𑍂॥ 𑌤𑌥𑌾𑌕𑌾𑌰𑌯𑌿𑌤𑍃𑌕𑌾𑌰𑌕𑌯𑍋𑌰𑍍𑌧𑌰𑍍𑌮𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 ॥௬௭॥

(எ-து) அப்படிச் செய்விப்பவன், செய்பவன் ஆகிய இரண்டுபேர்களுக்கும் தர்மம் ஸித்திக்கும்.

𑌸𑍂॥ 𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌯𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌕𑌾𑌲𑍇 𑌋𑌜𑍁𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌹𑍀𑌨𑌂 𑌨𑍃𑌪𑌃 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍॥ ௬௮॥

(எ-து) வியவகாரங்களை விசாரிக்கும்பொது சரியான ருஜுவில்லா வியவகாரத்தை அரசன் தள்ளிவிடவேண்டும்.

𑌸𑍂॥ 𑌸𑌂𑌧𑌿 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌸𑌨 𑌯𑌾𑌨 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌦𑍍𑌵𑍈𑌧𑍀 𑌭𑌾𑌵𑌾𑌨𑍁𑌕𑌾𑌰𑌾𑌯𑌣𑌂𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍॥ ௬௯॥

(எ-து) சமாதானம், எதிர்த்துவரும் சத்துருவை உபேக்ஷைசெய்து ரகஸ்யமான விடத்திலிருப்பது, சேனைகளுடன் யுத்தத்திற்குச் செல்லுதல், சத்துருவை ஜயிப்பதற்காக பலவானைச்சரணமடைதல், எதிராளியுடன் ஒருவனுக்குக் கலகமேற்படுத்துதல் இவைகள் தன் இஷ்டபிராப்தியின் பொருட்டுச் செய்யவேண்டியவை.

𑌸𑍂॥ 𑌬𑌲𑍀𑌯𑌾𑌂𑌸𑌂 𑌶𑍍𑌰𑌯𑍇𑌤𑍍 𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑌪𑌲𑌾𑌯𑌨𑌃॥ ௭௦॥

(எ-து) சத்துரு பலவானயிருக்கும்பக்ஷத்தில் ஓடிப்போக இஷ்டமில்லாதவன் வணங்கிவிடவேண்டும்.

𑌸𑍂॥ 𑌉𑌪𑌰𑍁𑌨𑍍𑌧𑍍𑌯 𑌪𑌰𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌣𑌿 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍॥ ௭௧॥

(எ-து) சத்துருராஜாவின் கோட்டைமுதலியவைகளை தனது சேனைகளைக்கொண்டு [illegible] வகைபோட்டுப்பிடிக்கவேண்டும்.

ஸூ|| மந்த்ரௌஷத ப்ரயோகேண வா சத்ரும் மூர்ச்சிதம் க்ருத்வா ராஜ்யம் க்ருஹ்ணீயாத்|| ௪௧||

(எ-து) மந்திரம், ஔஷதம், இவைகளின் பிரயோகங்களால் சத்துருவை மூர்ச்சை அடையும்படி செய்தாவது இராஜ்யத்தைக் கைகொள்ளவேண்டும்.

ஸூ|| க்ருஹீத்வா தேவப்ராஹ்மணாந் பாலயேத்|| ௪௨||

(எ-து) அப்படித் தான் சம்பாதித்த பொருளைக் கொண்டு தேவர் பிராமணர் இவர்களைப் பாதுகாக்கவேண்டும்.

ஸூ|| ஏவம் குர்வந் த்ருஷ்டாத்ருஷ்ட ஸௌக்யம் ப்ராப்நோதி|| ௪௫||

(எ-து) இப்படிச்செய்கிறவன் பிரத்தியக்ஷத்தில் சுகலாபத்தையும் லோகாந்தரத்தில் ஸ்வர்கபோகத்தையும் அடைவான்.

ஜாவிட தாத்ய-ஸஹித பாயஸூத்ரம்
ஸம்பூர்ணம்.

விளம்பரம்.

இதனால் சகலாஸ்திக ஜனங்களுக்கும் தெரிவிப்பதென்னவென்றால்.—இம்முத்திராக்ஷரசாலையில் இப்புத்தகமும் இன்னும் கிரந்தம், தமிழ், தெலுங்கு, புத்தகங்களும், வர்த்தகர்களுக்கும், சில்லரைக்கும் விர்ப்பனைக்கு சித்தமாயிருக்கிற படியால் வேண்டியவர்கள் இதனடியில் கண்டிருக்கும் விலாசத்திற்கு யெழுதி வீ. பீ. மூலமாய் வரவழைத்துக் கொள்ளலாம்.

இதின் விலை அணா 1.

ஷ கிளேஸ் ,, ,, 2.

இப்படிக்கு.

தி. சுப்பிரமணியசாஸ்திரி.

சாஸ்திரஸஞ்சீவிநீபிரஸ்,

நெ. 313 தங்கசாலைத்தெருவு.

Madras. மதருஸ்.